


# மதம் ஜாதியைக் கடந்த மக்களாய் நம் குழந்தைகள்



அன்பார்ந்த உழைக்கும் மக்களே!

## காணொளியில் புதியது



புதிய கல்விக் கொள்கை 2019க்காக மக்களை அழைக்காமல் யாருக்கும் தெரியாமல் கருத்துக் கேட்புக் கூட்டம்

## தமிழில் எழுதவேண்டுமா?

தமிழ்

Privacy & Cookies: This site uses cookies. By continuing to use this website, you agree to their use.
To find out more, including how to control cookies, see here: **Cookie Policy**

Close and accept

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

கோடை விடுமுறை கடந்து பள்ளிகள் மீண்டும் திறக்கும் காலம் வந்துவிட்டது. பிள்ளைகளை பள்ளியில் சேர்ப்பதென்பது பெற்றோர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதை யாரும் தனிப்பட்டு கூறத் தேவையில்லை. ஆனால் மனிதர்களாய் பிறக்கும் நம் குழந்தைகள் மதம் ஜாதி என்றால் என்னவென்றே அறியாமல் பெற்றோர்களின் விருப்பத்தால் மரபால் அதற்குள் திணிக்கப்படுகிறார்கள். விதையிலேயே ஏற்றப்படும் நஞ்சைப் போல் அவர்கள் உருவாகுமுன்னே அவர்களின் சிந்தனை வழியை கைப்பற்றிவிடத் துடிக்கிறோம். ஜாதிகளும், மதங்களுமே எல்லாவற்றையும் வழிநடத்தத் தகுந்ததாகும், அதுவே சரியானதுமாகும் என எந்த மீளாய்வுக்கும் ஆயத்தமின்றி ‘நம்புபவர்களை’ விட்டு விடுவோம். ஜாதி மதங்கள் அபத்தமானவை என்று ஏற்பவர்களும் கூட சமூக அழுத்தங்களால் நீடித்துக் கொண்டு; அந்த அழுத்தங்களின் தயக்கங்களால் தம் குழந்தைகளையும் அவர்கள் அழுந்திக் கிடக்கும் ஜாதி மதங்களுக்குள்ளே அழுத்தி வைப்பது என்ன நீதி?

எவரையும், ஏதாவது ஒரு மதத்தின், ஜாதியின் வார்ப்பாய் இருக்க வைப்பதில் நடப்பு கட்டுப்பாடுகள் பெரும்பங்கு வகிக்கின்றன, குறிப்பாய் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள். தம் குழந்தைகளை ஜாதி மதமற்றவர்களாய் வளர்க்க விரும்பும் யாரும் முதலில் எதிர்கொள்வது இந்த தலைமை ஆசிரியர்களைத் தாம். ஒரு குழந்தையை பயிற்றுவிப்பதில் எந்த அக்கரையும் எடுத்துக் கொள்ளாமல் ஊதியத்துக்கான ஒரு வேலையாய் மட்டுமே ஆசிரியத் தொழிலை கருதுபவர்கள், இந்த சூழலில் மட்டும் நம் மீதும் நம் குழந்தைகள் மீதும் மிகுந்த கரிசனம் கொண்டவர்களாக மாறிப் போவார்கள். குழந்தையின் எதிர்காலம் குறித்த விசயம் என்பதால் உங்களின் சுய விருப்பு வெறுப்புகளை குழந்தைகளின் மீது திணிக்காதீர்கள் என்பார்கள். அரசின் சலுகைகள் கிடைக்காமல் போகும் என்று மிரட்டுவார்கள். வளர்ந்த பின் அவர்கள் பிரச்சனைகளை எதிர் கொள்ள நேரிடும் என்று எச்சரிப்பார்கள். எல்லாவற்றுக்கும் மேலாய், இதற்கான வழிமுறைகள் எனக்குத் தெரியாது, எதற்கும் நீங்கள் வட்டாட்சியரையோ, வருவாய் அலுவலரையோ சந்தித்து கடிதம் வாங்கி வாருங்களேன் என்று கை கழுவுவார்கள்.

சுய விருப்பு வெறுப்புகளை குழந்தைகளின் மீது திணிப்பவர்கள் யார்? தன் குழந்தை எப்படி சுயநலமாய் இருக்க வேண்டும் என்பதில் தொடங்கி கல்லூரியில் என்ன படிப்பு படிக்க வேண்டும்? என்ன வேலைக்கு செல்ல வேண்டும்? யாரை திருமணம் செய்ய வேண்டும்? என்ன வழியில் வாழ வேண்டும்? என்பது வரை அனைத்திலும் தன்னுடைய விருப்பத்தை,


### அஞ்சலில் வேண்டுவோர்க்கு….

இதில் உங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிந்து கொள்ளுங்கள்

Join 2,582 other followers

Enter your email address

சொடுக்கவும்



### இணைப்புகள்

- அசுரன்
- அறிவியல்புரம்
- ஏகலைவன்
- ஒளிரும் பாதை
- கம்யூனிச பூதம்
- கலகம்
- கலையகம்
- கார்க்கி
- குமரிமைந்தன்
- குருத்து
- சமரசம் உலவும் இடமே
- சர்வதேசியவாதிகள்
- சிறகுகள்
- சுனா பானா
- சூறாவளி
- செங்கொடி
- செங்கொடி மருது
- ஜெயபாரதன்
- தமிழச்சி
- தமிழ் அரங்கம்
- தமிழ் சசி
- தமிழ் பகுத்தறிவாளர்கள்
- நரேன் பார்வை
- நல்லூர் முழக்கம்
- பகடு
- பறையோசை
- பு.மா.இ.மு
- போராட்டம்
- ம(னி)தம்
- முகவரி
- வலிபோக்கன்



PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

ஆசையை, நிறைவேறாத கனவுகளை தன்னுடைய குழந்தைகளின் மீது நேரடியாக திணிப்பவர்கள் நமக்கு அறிவுரை கூறுகிறார்கள், ‘உங்களின் விருப்பு வெறுப்புகளை குழந்தைகளின் மீது திணிக்காதீர்கள்’ என்று. தன்னுடைய குழந்தைக்கு ஜாதி மதம் வேண்டாம் என தீர்மானிப்பவர்கள் ஜனநாயக பூர்வமாக அனைத்தையும் சிந்தித்து தகுந்த ஆலோசனைகளைப் பெற்றே செய்வார்கள். ஆனால் எதைப்பற்றியும் யோசிக்காமல் தன்னுடைய களிமண் எச்சமாக தன் குழந்தை இருந்தாக வேண்டும் என்பவர்களின் ஆட்சேபங்களை அற்பமாக எண்ணி நாம் கடந்தாக வேண்டும்.

நம் குழந்தைகளுக்கு தற்போது அரசு என்ன சலுகைகளை வழங்கி விட்டது? அடிப்படைத் தேவையான கல்வியையும், சுகாதாரத்தையுமே தனியாரிடம் அடகு வைத்துவிட்டு சாராயம் விற்றுக் கொண்டிருக்கும் அரசு நம் குழந்தைகள் மீது என்ன கரிசனம் செலுத்தி சலுகைகளை தந்துவிடப் போகிறது? நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்கு சிறந்த கல்வியும், சரியான வேலை வாய்ப்புமே தேவை. அதை வழங்குமா இந்த அரசு? நம்மை பிச்சைக் காரர்களாய் மாற்றி நம் தன்மானத்தை விலையாய் கேட்கும், இலவச, விலையில்லாப் பொருட்களுக்கு கூட ஜாதி மதத்தை கூறியாகவேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை.

எதிர்காலத்தில் பிரச்சனைகள் ஏற்படும் என்று மிரட்டும் எவரையும், நிதானமாய் என்ன பிரச்சனை ஏற்படக் கூடும் என்று கருதுகிறீர்கள்? என்று எதிர் கேள்வி கேட்டுப் பாருங்கள். பதில் கூற முடியாமல் விழிப்பார்கள். ஜாதி மதத்தை பதிவு செய்ய மறுப்பதால் ஏற்படப் போவதாக கருதப்படும் ஒரே பிரச்சனை இட ஒதுக்கீடு. இட ஒதுக்கீடு பலன் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஜாதி மதத்தை பதிவு செய்வது போன்ற அபத்தம் வேறொன்று இல்லை. கல்வியில் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு எனும் சொல்லை பொருளற்ற சொல்லாக மாற்றி நெடு நாட்கள் ஆகி விட்டன. அரசு பள்ளிகள், கல்லூரிகள் போதிய வசதிகளற்று, ஆசிரியர்களின்றி, கவனமின்றி, கவனிப்பின்றி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றன. தனியார் கல்லூரிகள், பள்ளிகள் கொள்ளையடிப்பதற்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் அரசே முன்னின்று செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் கல்வியில் இட ஒதுக்கீடு உங்கள் குழந்தைகளின் வாழ்வில் எதைச் செய்து விடும்? வேலை வாய்ப்பு .. .. ..? அரசு துறையில் வேலை வாய்ப்பு என்று ஏதேனும் மிச்ச மிருக்கிறதா? அரசு துறையே மிச்சமிருக்கிறதா என்று உருப்பெருக்கி வைத்து தெடும் நிலை தான் இருக்கிறது. அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு


- வலையுகம்
- விடுதலை
- வினவு வினை செய்
- வில்லவன்
- விவாதக்களம்
- வே.மதிமாறன்
- DR. ருத்ரன்
- superlinks

## அண்மைய பின்னூட்டங்கள்

- முகம்மதும் ஆய்ஷாவும் இல் C SUGUMAR
- 5,8 ம் வகுப்பு பொதுத்தேர்வு: த… இல் செங்கொடி
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத… இல் Vanamuthan
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத… இல் Melchizedek
- மக்காவின் பாதுகாப்பு: குரானின்… இல் Mydeen
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத… இல் Nirmal
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத… இல் Nirmal
- ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புத… இல் Raja NT
- 5,8 ம் வகுப்பு பொதுத்தேர்வு: த… இல் C SUGUMAR
- பகத் சிங் மீண்டும் சுவாசி… இல் செங்கொடி
- பகத் சிங் மீண்டும் சுவாசி… இல் Sam charly
- பூமி உருண்டை என யார் சொன்னது: … இல் DINAKAR
- முகம்மதும் ஆய்ஷாவும் இல் பெரியார் தடி
- செங்கோட்டை தாக்குதல்: பெரியாரி… இல் வெங்காய ராமசாமி
- உழைக்கும் மக்களின் வெற்றியைச்… இல் அப்துல்லாஹ்


PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

அடிமாட்டு விலையில் ஏற்கனவே விற்கப்பட்டு விட்டன. இருக்கும் சிலவும் கூட எப்படி எப்போது கைமாற்றுவது எனும் முடிவை எடுப்பதற்காகவே இயங்கிக் கொண்டிருக்கின்றன. தனியாரிடம் இட ஒதுக்கீடு எனும் முழுச் சொல்லை அல்ல 'இ' எனும் முதல் எழுத்தைக் கூட உச்சரிக்க முடியாது. இதை முன்வைத்தா சான்றிதழ்களில் அசிங்கங்களைச் சுமப்பது?

ஆகவே நண்பர்களே! தயக்கமின்றி சான்றிதழ்களில் ஜாதி மதம் தேவையற்றவன் என்று பதிவு செய்யுங்கள். இதற்கென்று தனியாக எந்த நடைமுறைகளையும், சடங்குகளையும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. என்னுடைய குழந்தைக்கு ஜாதி மதம் தேவையில்லை என்று கூறினால் மட்டும் போதுமானது. அப்படி வெறும் வாய் வார்த்தையால் கூறினாலே சான்றிதழில் பெற்றோரின் விருப்பப்படியே பதிவு செய்தாக வேண்டும் என்று அரசாணை இலக்கம்:1210 கூறுகிறது.அதுவும் இந்த அரசாணை வெளியிடப்பட்டு 39 ஆண்டுகள் ஆகி விட்டது என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? ஆம் 1973 ஆம் ஆண்டு அந்த அரசாணை வெளியிடப்பட்டு இன்று வரை நடப்பில் இருக்கிறது. ஆனால் இது குறித்து யாருக்கும் தெரியாது தெரிவிக்கப்படவும் இல்லை. மக்களை கசக்கிப் பிழிந்து விட்டு அதையே சாதனைகளாய், மக்கள் பணத்திலிருந்து பல கோடிகளை விளம்பரம் செய்ய பயன்படுத்தும் அரசுகள், இந்த அரசாணை குறித்து மக்களுக்கு தெளிவிப்பதே இல்லை. அந்த அரசாணை கீழே படமாக இணைக்கப்பட்டுள்ளது. வேண்டியவர்கள் படியெடுத்து பள்ளிகளில் காட்டி ஜாதி மதமற்றவர்களாக பதிவு செய்யுங்கள். மறுத்தால், அவர்களின் மறுப்பை எழுத்து பூர்வமாக கேளுங்கள். நடுநடுங்கிப் போவார்கள். உங்கள் குழந்தைகளை ஜாதி மதம் மறுத்து பள்ளிகளில் சேர்த்து மனிதனாக வளர்க்க வாழ்த்துக்கள்.

## நேயர் விருப்பம்


ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்


அத்தி வரதா எங்களுக்கு அறிவு வராதா


பூமி உருண்டை என யார் சொன்னது: அல்லாவா? மனிதனா?


குரானின் காலப்பிழைகள்


நூலகம்


ஆடு தாண்டும் காவிரியை மக்கள் தாண்டினால் .. .. ..


ஆதி மனிதன் மொழியறிந்தவனா? அல்லாவின் பதில் என்ன?


நான் ஏன் பிஜேவுடன் நேரடிவிவாதம் செய்ய விரும்பவில்லை?


விண்வெளியைக் கடந்த முதல் மனிதர் முகம்மதின் மிஹ்ராஜ்


முகம்மதும் ஆய்ஷாவும்

## வருகைப் பதிவேடு

778,499 பார்வைகள்

தேடல் …

## தேர்வு செய்க

- அசை படங்கள் (6)
- அறிமுகம் (9)
- அறிவிப்பு (1)
- உணர்வு மறுப்புரை (11)
- கடையநல்லூர் (1)
- கட்டுரை (324)
  - உக்ரைன் (6)
  - மொழிபெயர்ப்பு (2)
- கதை (5)
- கம்யூனிசம் (18)
  - அர.நீலகண்டன் (1)
- கவிதை (16)

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!



சுருக்கம்

தொடக்கக்கல்வி-பள்ளிச் சான்றிதழில் சாதி, சமயம் ஆகிய வற்றை குறிப்பிட விருப்பம் இல்லாதவர்க்கு உரிமை வழங்குதல்-ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி(சி2)துறை

அரசாணை(நிலை) எண்.205

நாள்31.72000

படிக்கப்பட்டவை

அரசாணை நிலை எண்.1210, கல்வி, நாள் 2.7.1973.

----

ஆணை:

–

–

பார்வையில் காணும் அரசாணையில் இடைநிலைப் பள்ளிச் சான்றிதழ் மற்றும் மாற்றல் சான்றிதழ் ஆகியவற்றில் சாதி இல்லை, சமயம் இல்லை என்று குறிப்பிடவோ, அந்த இரு பத்திகளுக்கும் எதிராக இடத்தைக் காலியாக விடவோ எவரும் விரும்பினால் அவ்வாறே செய்யும் உரிமையை , அவருக்கு அளிக்கலாம் என பள்ளிக்கல்வி இயக்குநருக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டது. ஆனால் இம்முறை சரியாக கடைப்பிடிக்கப் படவில்லை என்று அறியப்படுவதால், அரசாணையில் தெரிவித்துள்ளதை இனிவரும் காலங்களிலும் கடைப்பிடிக்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும் பள்ளியில் சேரும் போதும் மற்ற சமயங்களிலும் பெற்றோர் விருப்பப்படாவிட்டாலும், தெரிவிக்க இயலாவிட்டாலும், சாதி சமய குறிப்பு தேவையில்லை எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.ஏ.கௌரிசங்கர்,

அரசுச் செயலாளர்.

பெறுநர்

தொடக்கக்கல்வி இயக்குநர்,சென்னை-6

பள்ளிக்கல்விஇயக்குநர்,சென்னை-6

கடைசியாக ஒரு தகவல்: உலகின் மொத்த மக்கட் தொகையில் மூன்றாவது இடத்தில் இருப்பவர்கள் எந்த மதத்தையும் சாராதவர்களே. அதாவது உலகில் கிருஸ்தவத்தை பின்பற்றும், இஸ்லாத்தை பின்பற்றும் மக்களுக்கு அடுத்ததாக மூன்றாவது இடத்தில் இருப்பவர்கள் மதங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

*மின்னூலாக(PDF) தரவிறக்க*

Rate this:

0 0 தரப்படுத்தவும்

- காணொளி (19)
- காலண்டர் (2)
- கேள்வி பதில் (13)
- ஜெயமோகன் வன்முறை (5)
- திரைப்பட மதிப்புரை (21)
- நூல்கள்/வெளியீடுகள் (67)
  - இந்த மண்ணில் சொர்க்கத்தைப் படைப்போம் (32)
  - கம்யூனிஸ்டின் உருவாக்கம் (15)
- படங்கள் (14)
- புதிய ஜனநாயகம் (14)
- மதம் (105)
  - இஸ்லாம்: கற்பனைக்கோட்டை (58)
  - செங்கொடியல்ல இஸ்லாமே கற்பனைகளின் களம் (22)
- முகநூல் நறுக்குகள் (3)
- முழக்கம் (9)

## நூலகத்தில் புதியது




புதிய கல்விக் கொள்கை வரைவு 2019

## தொடர்புக்கு

மின்னஞ்சல் முகவரி:

**senkodi002@gmail.com**

senkodithamizhan@gmail.com

## மே 2012

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

பகிர்க:

Twitter | Facebook | WhatsApp | Email | Skype | Print | LinkedIn | Reddit

Like

Be the first to like this.

## PUBLISHED BY செங்கொடி



செங்கொடி எழுதிய எல்லா இடுகைகளையும் பார்க்கவும்

Posted on 31/05/2012
Posted in கட்டுரை
குறிச்சொல்லிடப்பட்டது அரசு, கல்லூரி, குழந்தைகள், ஜாதி, தனியார்மயம், பள்ளி, பொதுத்துறை, போராட்டம், மக்கள், மதம், வேலை வாய்ப்பு.



**ஜாதி மத ஒழிப்பில் முதல் எட்டு வைக்க விருப்பமா?**

In "கட்டுரை"



**இஸ்லாமிய திருமணம் புரட்சிகரமானதா?**

In "கட்டுரை"



**மீனின் வயிற்றில் மனிதனைப் பாதுகாத்த அல்லா**

In "இஸ்லாம்: கற்பனைக்கோட்டை"

முந்தைய
**பெண்கள் என்றால் .. .. ..**

அடுத்து
**இந்த மண்ணில் சொர்க்கத்தைப் படைப்போம் 24**

## 6 THOUGHTS ON "மதம் ஜாதியைக் கடந்த மக்களாய் நம் குழந்தைகள்"

**PATHU...**

| தி | செ | பு | விய | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |
| « ஏப் | | | ஜூன் » | | | |

## அண்மைய பதிவுகள்

- அத்தி வரதா எங்களுக்கு அறிவு வராதா
- மணமக்களை அழைக்காத திருமணம்
- பட்ஜெட்: யானை மிதித்து விழுந்த நிதி ஓட்டை
- ஒரே நாடு, ஒரே கார்(ர்)டு, ஒற்றே .. .. .. போடு
- பெருவெளியின் தூசு
- 5,8 ம் வகுப்பு பொதுத்தேர்வு: தரமா? தராதரமா?
- முகிலன் எங்கே?
- ஸ்டெர்லைட் போராட்டத்தின் போது நடத்தப்பட்டது என்ன? யார் அந்த சமூக விரோதிகள்?
- புல்வாமா தாக்குதல்: கேள்விகளை எழுப்புவோம்
- காதலர் தினம்: சமூகத்தையும் காதலிப்போம்
- காலம் – ஒரு வரலாற்றுச் சுருக்கம்
- கார்ப்பரேட் – காவி பாசிசம் எதிர்த்து நில்
- உழைக்கும் மக்களின் வெற்றியைச் சாதிப்போம்!
- தீண்டத்தகாதவர்கள் காந்தியிடம் ஏன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?
- காந்தி யார்?

## பிரிவுகள்

- அசை படங்கள் (6)
- அர.நீலகண்டன் (1)
- அறிமுகம் (9)
- அறிவிப்பு (1)
- இந்த மண்ணில் சொர்க்கத்தைப் படைப்போம் (32)
- இஸ்லாம்: கற்பனைக்கோட்டை (58)

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

9:55 பிப இல் 31/05/2012

good.

---

**VALAIYAKAM**

4:10 முப இல் 01/06/2012

வணக்கம் உறவே
உங்களின் அருமையான இடுகையை இன்னும் பல பார்வையாளர்கள் படிக்க இங்கே இணைக்கவும்
http://www.valaiyakam.com/

முகநூல் பயணர் கணக்கின் மூலம் வலையகத்தில் நீங்கள் எளிதில் நுழையலாம்.

5 ஓட்டுக்களை உங்கள் இடுகை பெற்றவுடன் தானியங்கியாக வலையகம் முகப்பில் உங்கள் இடுகை தோன்றும்.

ஓட்டுப்பட்டையை உங்கள் தளத்தில் இணைக்க:
http://www.valaiyakam.com/page.php?page=votetools
நன்றி

வலையகம்

---

Pingback: மதம் ஜாதியைக் கடந்த மக்களாய் நம் குழந்தைகள் «

---

**தோழர் வலிப்போக்கன்**

8:33 முப இல் 01/06/2012

ஆகவே நண்பர்களே! தயக்கமின்றி சான்றிதழ்களில் ஜாதி மதம் தேவையற்றவை என்று பதிவு செய்வோம் இதற்கென்று தனியாக எந்த நடைமுறைகளையும், சடங்குகளையும் தூக்கிஎறிவோம். நம்முடைய குழந்தைகளுக்கு ஜாதி மதம் தேவையில்லை என்று பயிற்று விப்போம்

---

**சிவக்குமார்**

10:38 முப இல் 01/06/2012

- உக்ரைன் (6)
- உணர்வு மறுப்புரை (11)
- கடையநல்லூர் (1)
- கட்டுரை (324)
- கதை (5)
- கம்யூனிசம் (18)
- கம்யூனிஸ்டின் உருவாக்கம் (15)
- கவிதை (16)
- காணொளி (19)
- காலண்டர் (2)
- கேள்வி பதில் (13)
- செங்கொடியல்ல இஸ்லாமே கற்பனைகளின் களம் (22)
- ஜெயமோகன் வன்முறை (5)
- திரைப்பட மதிப்புரை (21)
- நூல்கள்/வெளியீடுகள் (67)
- படங்கள் (14)
- புதிய ஜனநாயகம் (14)
- மதம் (105)
- முகநூல் நறுக்குகள் (3)
- முழக்கம் (9)
- மொழிபெயர்ப்பு (2)

### காப்பகம்

- ஜூலை 2019 (5)
- பிப்ரவரி 2019 (7)
- நவம்பர் 2018 (1)
- ஒக்ரோபர் 2018 (2)
- செப்ரெம்பர் 2018 (2)
- மே 2018 (4)
- ஏப்ரல் 2018 (3)
- மார்ச் 2018 (4)
- பிப்ரவரி 2018 (2)
- ஜனவரி 2018 (3)
- திசெம்பர் 2017 (2)
- நவம்பர் 2017 (5)
- ஒக்ரோபர் 2017 (1)
- செப்ரெம்பர் 2017 (7)
- ஓகஸ்ட் 2017 (2)
- ஜூலை 2017 (3)
- ஜூன் 2017 (4)
- மே 2017 (4)
- ஏப்ரல் 2017 (4)
- மார்ச் 2017 (5)
- பிப்ரவரி 2017 (5)
- ஜனவரி 2017 (8)
- திசெம்பர் 2016 (6)
- நவம்பர் 2016 (8)
- ஒக்ரோபர் 2016 (4)
- செப்ரெம்பர் 2016 (4)
- ஓகஸ்ட் 2016 (3)
- ஜூலை 2016 (5)
- ஜூன் 2016 (5)

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

அந்தப் புள்ளி விபரம் குறிதது இன்னும் சொல்ல முடியுமா ? குழப்பமாக இருக்கிறது

**VIBIN**

10:42 முப இல் 01/06/2012

நன்றி தோழரே. முடிந்தவரை பகிர்ந்துவிட்டேன்.

### உங்கள் கருத்தின் மூலம் என்னை மேம்படுத்துங்கள்

Enter your comment here...


- மே 2016 (4)
- ஏப்ரல் 2016 (5)
- மார்ச் 2016 (6)
- பிப்ரவரி 2016 (4)
- ஜனவரி 2016 (5)
- திசெம்பர் 2015 (3)
- நவம்பர் 2015 (4)
- ஒக்ரோபர் 2015 (2)
- செப்ரெம்பர் 2015 (3)
- ஓகஸ்ட் 2015 (1)
- ஜூலை 2015 (2)
- ஜூன் 2015 (3)
- மே 2015 (6)
- ஏப்ரல் 2015 (6)
- மார்ச் 2015 (5)
- பிப்ரவரி 2015 (7)
- திசெம்பர் 2014 (1)
- நவம்பர் 2014 (1)
- ஒக்ரோபர் 2014 (2)
- ஜூன் 2014 (1)
- மே 2014 (1)
- மார்ச் 2014 (5)
- பிப்ரவரி 2014 (1)
- ஜனவரி 2014 (1)
- திசெம்பர் 2013 (3)
- நவம்பர் 2013 (2)
- ஒக்ரோபர் 2013 (5)
- செப்ரெம்பர் 2013 (3)
- ஓகஸ்ட் 2013 (5)
- ஜூன் 2013 (3)
- மே 2013 (1)
- ஏப்ரல் 2013 (5)
- மார்ச் 2013 (4)
- பிப்ரவரி 2013 (4)
- ஜனவரி 2013 (6)
- திசெம்பர் 2012 (1)
- நவம்பர் 2012 (5)
- ஒக்ரோபர் 2012 (3)
- செப்ரெம்பர் 2012 (7)
- ஓகஸ்ட் 2012 (5)
- ஜூலை 2012 (8)
- ஜூன் 2012 (1)
- மே 2012 (10)
- ஏப்ரல் 2012 (5)
- மார்ச் 2012 (4)
- ஜனவரி 2012 (10)
- திசெம்பர் 2011 (9)
- நவம்பர் 2011 (8)
- ஒக்ரோபர் 2011 (9)
- செப்ரெம்பர் 2011 (10)
- ஓகஸ்ட் 2011 (10)
- ஜூலை 2011 (2)
- ஜூன் 2011 (5)
- மே 2011 (6)
- ஏப்ரல் 2011 (7)


PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

- மார்ச் 2011 (9)
- பிப்ரவரி 2011 (9)
- ஜனவரி 2011 (10)
- திசெம்பர் 2010 (9)
- நவம்பர் 2010 (8)
- ஒக்ரோபர் 2010 (9)
- செப்ரெம்பர் 2010 (8)
- ஓகஸ்ட் 2010 (9)
- ஜூலை 2010 (9)
- ஜூன் 2010 (9)
- மே 2010 (8)
- ஏப்ரல் 2010 (9)
- மார்ச் 2010 (7)
- பிப்ரவரி 2010 (6)
- ஜனவரி 2010 (8)
- திசெம்பர் 2009 (6)
- நவம்பர் 2009 (5)
- ஒக்ரோபர் 2009 (7)
- செப்ரெம்பர் 2009 (5)
- ஓகஸ்ட் 2009 (3)
- ஜூலை 2009 (1)
- ஜூன் 2009 (3)
- மே 2009 (7)
- ஏப்ரல் 2009 (6)
- மார்ச் 2009 (6)
- பிப்ரவரி 2009 (7)
- ஜனவரி 2009 (18)
- திசெம்பர் 2008 (30)
- நவம்பர் 2008 (1)

## தொடர்க




## இன்னும் தேடலாமே

தேடல் …

## வெளியேறும் முன்

**நண்பர்களே,**

*அனைவருக்கும், அனைத்தின் மீதும் கருத்து இருக்கும் என எண்ணுகிறேன். இத்தளம் குறித்தும் உங்களுக்கு நன்றாகவோ, நன்றல்லதாகவோ கருத்து இருக்கலாம். எதுவாகிலும் அதை நீங்கள் பின்னூட்டமாக பகிரலாம். அல்லது வெளிப்படையாக பகிரப்பட வேண்டாம் என எண்ணினால் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் என்னுடைய மின்னஞ்சலுக்கு தெரிவியுங்கள். நீங்கள் கூறப்போகும் கருத்துக்காக காத்திருக்கிறேன்.*

நன்றி.

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!

PDFmyURL easily turns web pages and even entire websites into PDF!